
உ

சிவமயம்



# வெற்றி மலர்

18.02.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும்

கொண்டவருமான

அமரர்

# சின்னத்தம்பி வெற்றிவேலு

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# வெற்றி மலர்

18-02-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி - வெற்றிவேலு

## அவர்கள்



தோற்றம்
07 – 01 – 1929

மறைவு
20 – 01 – 2002

## திதி நிர்ணய வெண்பா

திருநிறை விஷு வருடம் திகழ்தைத் திங்கள்
பூர்வ பக்கச் சட்டிப் புனிதநாள் - திருநிறை
வெற்றிவேலு வெற்றிவேற் பெம்மான்
பதமலரைச் சேர்ந்தான் பணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# அமரர்
# சின்னத்தம்பி வெற்றிவேலு
அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

இந்து மகா சமுத்திரத்தின் நடுவே அழகுடை முத்தாய் திகழ்வது நம் ஈழமணித்திருநாடு. இதன் மணிமுடி என விளங்குவது யாழ்பாடி பரிசு பெற்ற யாழ்ப்பாணம். யாழ்ப்பாண நன்நகரின் மேற்திசையில் அமைந்து நீர்வளம், நிலவளம், பொருள்வளம் பொருந்தி சிறப்புற்று விளங்குவது பண்ணாகம் கிராமம். இக்கிராமம் விசவத்தனை முருகன் ஆலயம், ஆலடி வயிரவர் கோவில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டது. மேலும் பொக்கட்டப் பரியாரியார் என்ற சித்தர், எதிர்க்கட்சி முதல்வராக விளங்கிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்ற அறிஞர்களையும் பெற்றுச் சிறப்புற்றது. தற்போது இங்குள்ள மக்கள் அரசசேவை, வைத்தியம், விவசாயம், வர்த்தகம் போன்ற துறைகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்வை வளப் படுத்துகின்றனர். இவர்கள் ஆலய வழிபாட்டிலும், அறநெறியுடன் வாழ்வதிலும் சிறப்புற்று விளங்குகின்றனர்.

இத்தகைய சிறப்புடைய கிராமத்தில் தோன்றியவர் விசுவநாதர். விசுவநாதருடைய பதினாறு ஆண்மக்களுள் ஒருவர் வெற்றிவேலு. வெற்றிவேலு அவர்களின் தலைமகன் சின்னத்தம்பி அவர்கள் இவ்வூர் பரமு குழந்தையார் தம்பதிகளின் மகள் சின்னாச்சிப்பிள்ளை (வெள்ளிமலை) அவர்களைத் திருமணம் செய்து இல்லறம் நடத்தி வந்தார்

மங்கலம் என்ப மனைமாட்சி - மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப சின்னத்தம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் இல்வாழ்வின் பயனாக தங்கம்மா, தவமணி, நல்லம்மா என்ற மூன்று பெண் மக்களைப் பெற்றனர். ஆண்மகவு இல்லையே என்று இவர்கள் விசவத்தனை வேலவனை வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினர். வேலவன் அருளால் நான்காவதாக ஓர் ஆண் குழந்தத கிடைத்தது. இக்குழந்தைக்கு சுப்பிரமணியம் எனப் பெயரிட்டனர். இவரின் பின்னர் கைலாயபிள்ளை, வெற்றிவேலு என்னும் ஆண் பிள்ளைகளைப் பெற்று பேரு வகையடைந்தனர்.

இவர்களுள் சின்னத்தம்பி வெற்றிவேலு அவர்களே இவ்வரலாற்றின் நாயகன். இவர் 07 - 01 - 1929 இல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை யா/பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையிலும் உயர் கல்வியை யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். பின்னர் பண்ணாகம் கூட்டுறவுப் பண்டகசாலையில் விற்பனையாளராகச் சேர்ந்து கடமையாற்றினார்.

இவர் தமது ஐந்தாம் வயதிலேயே தாயாரை இழந்தார். தந்தையாரினதும், சகோதரர்களினதும் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். இளமைக் காலத்தில் தந்தையாருக்கு வயல் வேலைகளில் உதவி செய்து வந்தார். படிக்கும் காலத்தில் சாரணர் இபக்கம் போன்ற வற்றிலும், விளையாட்டுத் துறையிலும் ஈடுபட்டு சிறந்து விளங்கினார்.

பின்னர் திருவடிநிலை இந்து தமிழ் வித்தியாலயத்தில் சில காலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்பு திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் எழுதுவினைஞராக கடமையாற்றினார். பின்னர் யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து கற்று கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தினார். இவரது தராதரத்தை அறிந்த சுழிபுரம் மத்தி கூட்டுறவுப் பண்டகசாலை நிர்வாகத்தினர் இவரைத் தங்கள் சங்க முகாமைப்பாளராக நியமித்தனர். இங்கு இவர் கடமையாற்றும் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசுடமை ஆக்கப்பட்டன இதன் பின்னர் இவர் சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட பலகிளைகளில் கடமையாற்றினார்.

பண்ணாகம் கூட்டுறவுச் சங்கத்தில் இவர் கடமையாற்றிய காலத்தில் இவரது குணநலன்களை அறிந்த இவரது மாமியார் சின்னையா மாரிமுத்து தனது மருகராக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினார். இவரது சகோதரர் கைலாயபிள்ளை மூல மாக மணம் பேசுவித்து தனது மகள் சரஸ்வதியை 1956 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வெள்ளிக்கிழமை திருமணம் செய்து வைத்தார். இவர்கள் அன்றிலும் பெடையும் போல இணை பிரியாது வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் இல்லற வாழ்வின் பயனாக அன்பழகன், கலையழகன், அருளழகன், வேலழகன் என்ற மக்கட் செல் வங்களைப் பெற்று மகிழ்ந்தனர், ''தந்தை மகற்கு ஆற் றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் - செயல்'' என்ற வள்ளுவன் வாகிற்கு இணங்க தம் பிள்ளைகளை கல்வி கேள்விகளில் வல்லவர்களாக்கினார்.

இவர் தனது மக்களை இல்லற வாழ்வில் இணைக்க விரும்பி மூத்த மகன் அன்பழகனை அராலியூர் வைத்தியக் கலாநிதி சிதம்பரநாதன் இரத்தினம்மா தம்பதிமளின் மகள் ஸ்ரீசிவசண்முகானந்ததேவிக்கு மாங்கல்யதாரணம் செய்து வைத்து மகிழ்வெய்தினார்.

இரண்டாவது மகன் கலையழகனை நாரந்தனை யூர் முத்தையா மகேஸ்வரி தம்பதிகளின் மகள் தவசோதிக்கு கல்யாணம் செய்து வைத்தார். கல்யாண வாழ்வு கற்கண் டாக இனிக்க ஐங்கரன், சங்கவி, பயிரவி என்ற பேரப் பிள்ளைகளைக் கண்டு பேருவகை அடைந்தார்.

மூன்றாவது மகன் அருளழகனுக்கு தனது மருகன் கந்தசாமி பத்மராணி தம்பதிகளின் மகள் நற்குணதேவிக்கு திருமணம் செய்து வைத்து பகீரதன் என்ற பேரனைப் பெற்று மகிழ்ந்தார்.

திரை கடலோடித் திரவியம் தேடப் புயப்பட்ட நான்காவது மகன் வேலழகன் ஜேர்மன் நாட்டில் வாழும் கொக்குவில் குமாரவேலு தியாகேஸ்வரி தம்பதிகளின் செல்வ மகள் அருணிமைப தனது மனையாள் ஆக்கிக் கொண்டார். இவர்களது இல்வாழ்வின் பயனாக பாரதியைத் தனது பேரக் குழந்தையாகக் கண்டு மகிழ்ந்தார்.

இப்படியாக குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்ட வெற்றிவேலு சமய சமூகப் பணிகளிலும் ஈடு படத் தவறவில்லை இளமைக் காலத்தில் ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தில் பல பதவிகளை வகித்தார். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கம், கிராம அபி விருத்திச் சங்கம், விசவத்தனை முருகன் பரிபாலன சபை போன்றவற்றில் பல பதவிகளை வகித்து சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் ஆற்றிவந்தார்.

ஆலய வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு உடைய வெற்றிவேலு அவர்கள் தினமும் காலை நீராடி ஈர வஸ்திரத்துடன் ஆலடி வைரவருக்கு புஷ்பாஞ்சலி செய்த பின்னரே உணவு அருந்துவார். சிறு வயது முதலே வைரவப் பெருமானுக்கு மாலையில் விளக்கேற்றி விடியும் வரை ஆலயச் சூழலை ஒளியுடையதாகச் செய்தார். பிற்காலத்தில் தினமும் மாலையில் விசவத்தனையானை தரிசிக்கத் தவறுவதில்லை.

கூட்டுறவுத் துறையில் நீண்டகாலம் கடமையாற்றிய இவர் தமது திறமைக்காகப் பல பரிசில்களைப் பெற்றுள்ளார். அதுமட்டுமல்ல இவர் வேலை செய்த சகல சங்கங்களிலும் வாடிக்கையாளர்களுடன் அன்பாகப் பழகி அவர்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ளார்.

வெற்றிவேலு அவர்களை எல்லோரும் வெற்றி என்றே அழைப்பார்கள். இப்படியாக எல்லோராலும் வெற்றி என்று அழைக்கப்பட்ட வெற்றிவேலு அவர்கள் தம் வாழ்நாளையும் வெற்றியாக நிறைவு செய்து கொண்டார்.

சிறிது காலம் நோய்வாய்ப் பட்டிருந்த இவர் தான் இனி வாழக் கூடாது ஆண்டவன் திருவடியை சென்றடைய வேண்டும் என்றே கூறிக்கொள்வார். அவர் விருப்புக் கேற்ப தைத் திங்கள் ஷஷ்டித் திதியில் 20 - 01 - 2002 இல் அவர் தினமும் வணங்கும் ஆலடியான் திருவடியைச் சென்றடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



## ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொழி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுந்தி யென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பா லுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள்தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

விநாயகர் அகவல் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்

"நின்று மிருந்து கிடந்தும் நினை
என்றும் சிவன் தாளினை"

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பால தொன்றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

அந்தணாளனுன் னடைக்கலம் புகுதல்
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்ற னாருயிரதனை
வவ்வினாயக் குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை யெமன்றமர் நலியின்
இவன் மற்றென்னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப்புன் கூருளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே.
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெத அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்-

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்றஅதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகி பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வேவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்கவல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை



# அபிராமி அந்தாதி

கணபதி காப்பு

(கட்டளைக் கலித்துறை)

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்த னேஉல(கு) ஏழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித்துணையே. 1.

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே. 2.

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே 4.

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு)அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே. 5.

சென்னிய(து) உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னி(து) என்றும் உன் றன்பர் மாகம பத்ததியே. 6.

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7.

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே 8.

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரனும் நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே. 9.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து)உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமரையின்
ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே. 10.

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11.

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து)உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணிய(து) உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து)என்அம் மேபுவி ஏழையும் பூத்தவளே. 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே 13

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்(கு)எளி தாம்எம் பிராட்டிநின் தண்ணளியே 14.

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே 15.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்கள் ஆகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவள விற்(கு)அள வான(து) அதிசயமே. 16.

அதிசய மான வடிவுடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17.

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18.

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திருநின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19.

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20.

மங்கல செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே 21.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து) இங்(கு)இனிப்பிற வாமல்வந்(து) ஆண்டு
கொள்ளே 22.

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து)அன்பர் கூட்டம்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) (தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24.

பின்னே திரிந்(து) உன்அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே. 25.

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின் தாள்இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே. 26.

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27.

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ யோகமும் சித்திக்குமே. 28.

சித்தியும் சித்தி தரும்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29.

அன்றே தடுத்(து)என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து)
அல்லஎன்கை
நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வே அரு வே என் உமையவளே. 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31.

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. 32.

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல்என் பாய்அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே 33.

வந்தே சரணம் புகும்அடி யாருக்கும் வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே, 34.

திங்கட் பகவின் மணநாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும்உன்றன்
அருளே(து) அறிகின் றிலேன்அம்(பு) யாதனத்(து) அம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே. 37.

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38.

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தா மரைகள்உண்(டு) அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாள்நுதலே 39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம்அன் றோமுன்செய் புண்ணியமே

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதிந்திடவே. 41,

இடம்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே. 42.

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே. 43.

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுன் டாகமெய்த் தொண்டுசெய்தே

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே 46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47.

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே 48,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வளைக்கைஅமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே. 49.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்(று)
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50.

அரணம் பொருள்என்(று) அருள்ஒன்(று) இல்லாத அசுரர்தங்கள்
முரணன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. 51.

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52.

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53.

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54.

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள்அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56.

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே. 57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. 58.

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல(து) என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே, 59.

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே. 60.

நாயே னையும்இங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கச்சியே. 61.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே. 62.

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.. 63.

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்அன்பு
பூணேன் உனக்(கு)அன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே. 64.

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65.

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67.

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68.

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே. 69.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70.

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேல்உனக்(கு) என்குறையே 71.

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72.

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழு(து)எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு)ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74,

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தேன் மனத்தில்நின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிட்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76.

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவிம் மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77.

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவை தேன்என் துணைவிழிக்கே. 78.

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80.

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து)உன(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியால் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82.

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83.

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிட யாளைஇங்கு என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே 84.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் திசைதோறும் பாசாங் குசமும் பணிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்புமென் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்கும் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே 85.

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே. 87.

பரமென்(று) உனையடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரமன்(று) இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்(று) எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே. 88.

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவின் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே. 90.

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. 91.

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
கரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே 95.

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே. 96.

அதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடை கத்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97.

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரர்க்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருதகண் ணும்நெஞ்சில்எப்போது உதிக்கின்றவே 100

நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவியடங்கக்
கத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்
# அஷ்டோத்தர சத திவ்விய நாமங்கள்

(அர்ச்சனை மந்திரம் 108)

ஓம் போத நிர்க்குண போதா நமோ நம
,, நாத நிஷ்கள நாதா நமோ நம
,, பூரணக் கலை சாரா நமோ நம
,, பஞ்சபாண பூபன் மைத்துன பூபா நமோ நம
,, நீப புஷ்பக தாளா நமோ நம
,, போக சொர்க்கபு பாலா நமோ நம
,, சங்க மேறும் மாதமிழ்த்ரய சேயே நமோ நம
,, வேத னத்ரய வாழ்வே நமோ நம
,, வாழ் சகத்ரய வாழ்வே நமோ நம
,, வேத வித்தகா சாமீ நமோ நம

ஓம் வேல் மிகுத்த மாசூரா நமோ நம
,, வீம சக்ரயூ காளா நமோ நம
,, விந்துநாத வீரபத்ம சீர்பாதா நமோ நம
,, நீலமிக்க கூதாளா நமோ நம
,, மேக மொத்த மாயூரா நமோ நம
,, விண்டிடாத போத மொத்த பேர்
போதா நமோ நம
,, பூத மற்றுமே யானாய் நமோ நம
,, பூரணந்நுளே வாழ்வாய் நமோ நம
,, துங்கமேவும் பூதரத் தெலாம் வாழ்வாய் நமோ நம
,, அறிரட்டி நீள் தோளா நமோ நம

ஓம் பூஷணத்துமா மார்பா நமோ நம
,, ஆர்யை பெற்ற சீராளா நமோ நம
,, சூரையட்டு நீள் பேரா நமோ நம
,, ஆரணத்தினார் வாழ்வே நமோ நம
,, சீதள வாரிஜ பாதா நமோ நம
,, நாரத கீத விநோதா நமோ நம
,, சேவல மாமயில் ப்ரீதா நமோ நம
,, மறை தேடுஞ் சேகரமான ப்ரதாபா நமோ நம
,, ஆகம சார சொரூபா நமோ நம
,, தேவர்கள் சேனை மகீபா நமோ நம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கதி தோயப் பாதக நீவு குடாரா நமோ நம
,, மாவசுரேச கடோரா நமோ நம
,, பாரினிலே ஜய வீரா நமோ நம
,, மலைமாது பார்வதியாள்தரு பாலா நமோ நம
,, நாவல ஞான மனோலா நமோ நம
,, பால குமார சுவாமீ நமோ நம
,, நாத விந்து கலாதீ நமோ நம
,, வேத மந்த்ர சொரூபா நமோ நம
,, ஞான பண்டித சாமீ நமோ நம
,, வெகு கோடி நாமசம்பு குமாரா நமோ நம

ஓம் போக அந்தரி பாலா நமோ நம
,, நாக பந்த மயூரா நமோ நம
,, பரசூரர் சேததண்ட விநோதா நமோ நம
,, கீத கிண்கிணி பாதா நமோ நம
,, தீர சம்ப்ரம வீரா நமோ நம
,, கிரிராஜ தீபமங்கள ஜோதி நமோ நம
,, தூய அம்பல லீலா நமோ நம
,, தேவ குஞ்சரி பாகா நமோ நம
,, போதகந் தரு கோவே நமோ நம
,, நீதி தங்கிய தேவா நமோ நம

ஓம் பூதலந் தனை யாள்வாய் நமோ நம
,, பணியாவும் பூணுகின்ற பிரானே நமோ நம
,, வேடவர் தங்கொடி மாலா நமோ நம
,, போதவன் புகழ் சாமீ நமோ நம
,, அரிதான வேத மந்திர ரூபா நமோ நம
,, ஞான பண்டித நாதா நமோ நம
,, வீர கண்டை கொள் தாளா நமோ நம
,, அழகான மேனி தங்கிய வேளே நமோ நம
,, வான பைந்தொடி வாழ்வே நமோ நம
,, வீறு கொண்ட விசாகா நமோ நம

ஓம் சிவசிவ ஹரஹர தேவா நமோ நம
,, தெரிசன பரகதி யானாய் நமோ நம
,, திசையினு மிசையினும் வாழ்வே நமோ நம
,, செஞ்சொல் சேர்சுக குறமகள் மணாளா நமோ நம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,, திரிபுர மெரிசெய்த கோவே நமோ நம
,, ஜெயஜெய ஹரஹர தேவா நமோ நம
,, உம்பர்கள் ஸ்வாமீ நமோ நம
,, எம் பெருமானே நமோ நம
,, ஒண்டொடி மோகா நமோ நம
,, சரவண ஜாதா நமோ நம

ஓம் கருணைய தீதா நமோ நம
,, சததள பாதா நமோ நம
,, அபிராம தருணக தீரா நமோ நம
,, நிருபமர் வீரா நமோ நம
,, சமதள வூரா நமோ நம
,, ஜகதீச பரம சொரூபா நமோ நம
,, சுரர்பதி பூபா நமோ நம
,, பரிமள நீபா நமோ நம
,, உமை காளி பகவதி பாலா நமோ நம
,, இகபர மூலா நமோ நம

ஓம் பவுருஷ சீலா நமோ நம
,, சக்தி பாணீ நமோ நம
,, முக்தி ஞானீ நமோ நம
,, தத்வ ஆதீ நமோ நம
,, விந்து நாத சத்துருபா நமோ நம
,, ரத்ன தீபா நமோ நம
,, தற்ப்ர தாபா நமோ நம
,, சிங்கார ரூபா மயில் வாகன நமோ நம
,, கந்தா குமாரசிவ தேசிக நமோ நம
,, சிந்தூர பார்வதி சுதாகர நமோ நம

ஓம் விருதோகை சிந்தான சோதி கதிர்வேலவ நமோ நம
,, கங்காள வேணிகுரு வானவ நமோ நம
,, அரிமரு கோனே நமோ நம
,, அறு தி யிலானே நமோ நம
,, அறு முக வேளே நமோ நம
,, அரகர சேயே நமோ நம
,, இமையவர் வாழ்வே நமோ நம
,, அருண சொரூபா நமோ நம
,, தென்பரங் குன்றுறை தேவா நமோ நம
,, செந்திலம் பதிவளர் சேயே நமோ நம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தென்பழநிமலை மேவு தீரா நமோ நம
,, திருவே ரகத்திலுறை தேனே நமோ நம
,, குன்று தோ றாடல்புரி குமரா நமோ நம
,, பழமுதிர் சோலைவளர் பதியே நமோ நம
,, மயில்மிசை வருமொரு வரதா நமோ நம
,, சேகர வாரண வேல்வீரா நமோ நம
,, மைவருங் கண்டத்தர் மைந்தா நமோ நம
,, குருவாய் வருவாய் குகனே நமோ நம

ஓம் சரவண பவ

நாநாவித மந்த்ர பரிமள பத்ர புஷ்பாணிம்

சமர்ப்பயாமி

சுபம்

# கந்தரந்தாதி

திருவாவி னன்குடி பங்கான ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே

(கருத்து) (பார்வதி சமேதரான) பரமசிவனும் லக்ஷமீ சமேதரான திருமாலும் புகழ்கின்ற கீர்த்தியும் வல்லமையுமுடைய குமாரக் கடவுளுக்கு உறைவிடமாகிய திருப்பரங்குன்றம் திருச்செந்தூர் பழநி திருவேரகம் குன்றுதோறாடல் பழமுதிர்சோலைமலை இவ் வாறு தலங்களையுந் துதியுங்கள்
1

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வராண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மறவென் றேடுவதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-து) நாகமலையில் வாழுங் சுந்தசுவாமியே உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக் கொடி என் ஆத்து மாவை அபயங்கொடுத்து ஆண்டுகொண்டது உன் வேலாயுதம்பிறப்புக்கிட மான பேராசையை யொழித்துவிட்டது: உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்து இனி யான் தேட வேண்டியது என்ன இருக்கின்றது 2

திரிகையி லாயிர வெல்லாழி மண்வின் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைத் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிர கோடிசுற் றோடுந் திருத்துளமே

(க-து) நித்தியமானவனே சராசரங்களைப் படைத்தும் பிரமகபால மேந்தியும் ஆநந்த நடனஞ்செய்து கயிலாசத்திலுறை கின்ற பரம சிவனுக்கும் இமயமலையின் குமாரியாகிய பார்வதிக்கும் மைந்தனே திருச்செந்திற் பதியோனே என் உள்ளமானது குலாலன் சக்கரமொரு தரம் சுற்றுவதற்குள் அநேககோடிதரம் சுற்றி வருகின்றது அதை யடக் கியருள வேண்டும் 3

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சாரந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

(க-து) கான்யாறோடும் புனத்திலிருந்த வள்ளிநாயகி பேரில் அன்பு கூர்ந்த செந்திநாயகனே? அசுரர்குலாந்தகனே! சேந்தனே: என்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கிரோ தயத்தாலாகுந் தீமையில்லை 4

திட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்
திட்டப் படாவினி யவரல்லவ யான்றிக்கு நான்மருப்புத்
திட்டப் படாவினி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
திட்டப் படாவினி வனையே நிலைவன் றீசாமுகனே

(க.து) பிரமாவே இனி யென்னை யுதரநிறைந்த கருக்குழியில் அழுந்துவோரைப்போல் நினையாதே இந்திரனது சிறையைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாத தாமரையை யடையும் பொருட்டு அவனையே தியானித்துக் கொண்டிருக்கிறேனாதலால் எனது தலை உன் கையால் இனி எழுதப்படாது 5

சிவசிவ சங்கர வேலா யுததினை வங்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுத்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-து) ஏகவஸ்துவான பரமசிவனது மைந்தனாகிய வேலாயுதத்தை யுடையோனே தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளி நாயகனே மயிலேறும் வீரனே மாவடிவாய் நின்ற சூரனை வென்ற வீரனே நின் திருவருளின் பிரகாசத்தினால் எனது கோபமென்னும் மிருகம் பொறுமை யென்னும் ஆயுதத்தால் அழிந்த தன்மையதாயிற்று 6

*திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்*
*திறவா வனச முனியைவென் றோய்தென் றிசைத்திருச்செந்*
*திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்*
*திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே*

(க-து) கயிலாயத்தின் கதவு திறக்கும்படிச் செய்கின்றவனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்து பிரம்மாவையும் வென்றோனே! தெற்கின் கண்ணதாகிய திருச்செந்தூரில் வாழும் மயில்வாகனனே! என் அனித்திய காலத்தில் உனது தண்டை யணிந்த தாளே என் சிந்தையை வைக்குமடைக்கல ஸ்தானமாம். 7

*சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்*
*சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்திலனமேற்*
*சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை வேட்டுவனெச்*
*சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே*

(க-து) சிற்றுமியும் ஈயாமல் மரம்போன் றிருப்பவர்களே நீங்கள் பிழைப்பதெப்படி நீர் தும்முங்காலையிலாவது தினைப்புனத்தின்கண் வள்ளி யம்மையினிடத்துத் தமது மரபையோதி நின்ற வனும் கண்ணப்ப நாயனார் நிவேதித்த எச்சிலை இனிதாகக்கொண்ட பரமசிவன் மைந்தனுமாகிய கந்தஸ்வாமியின் திருவடியைக் கருதிக் குமரனே சரணமென்பீரானாற் பிழைப்பீர்கள் 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்



## அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# கந்தரநுபூதி

காப்பு

நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்
செஞ்சொல்புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம்பணிவாம்

ஆடும்பரி வேலணி சேவலெனப்
பாடும்பணி யேபணி யாஅருள்வாய்
தேடுங்கய மாமுக னைச்செருவில்
சாடுந்தனி யானை சகோதரனே. [1]

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாமற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. [2]

வானோ புனல் பார்கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்டவிடம்
தானோபொரு ளாவது சண்முகனே [3]

வளைபட்ட கை மாகொடு மக்களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழு சூருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. [4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே. [5]

திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே. [6]

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. [7]

அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே. [8]

மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டுசல் படும்பரிசென் றொழிவேன்
தட்டுடற வேல்சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே. [9]

கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனும்
சூர்மா மடியத் தொடுவேலவனே. [10]

கூகாஎன என்கிளை கூடி அழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகாசுர லோக சிகாமணியே. [11]

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே. [12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் தனிவேல் முநிநம் குருவென்
றருள்கொண் டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
இருளன் றொளியன் றெனநின் றதுவே. [13]

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே. [14]

முருகன் குமரன் குகனென்று மொழிந்
குருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. [15]

பேராசை எனும் பிணியில் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர்பட வேல் எறியும்
சூரா சுரலோக துரந் தரனே. [16]

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல்மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல்நடவீர் நடவீர் இனியே. [17]

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகாவல சூர பயங்கரனே. [18]

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே. [19]

அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதாஉப தேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே. [20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந்தரஎன் றிசைவாய்
வரதா முருகாமயில் வாகனனே
விரதா சுரசூர விபாடணனே. [21]

காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச்சுர பூபதி மேருவையே. [22]

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. [23]

கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேனருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வேல் புரந்தர பூபதியே [24]

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந் [து]
ஐயோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. (25]

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. [26]

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. [27]

ஆனா வமுதே மயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா யவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. [28]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லே யெனுமா யைிலிட் டெனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. [29]

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்று
ஒவ்வா ததெனா வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. [30]

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. [31]

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. [32]

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. [33]

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்கார மசிகா வலசண் முருகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே. [34]

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. [35]

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. [36]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிவாய் வீடுவிக் ரமவே விறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறைபா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே. [37]

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா னியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகனம் புகழ்வே லவனே. [38]

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. [39]

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமபங் கிடவோ
சுனையோ டருவிந் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. (40]

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னோபதே சிகனே. [41]

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியை தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்(று)
அறிவற் றறியா மையுமற் றதுவே. [42]

தூசா யணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே. [43]

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. [44]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவா கியகல் வியுளார் கடைசென்(று)
இரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. [45]

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைத்தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. [46]

ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. [47]

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதையே
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. [48]

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே. [49]

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. [50]

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவாய் யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. [51]

கந்தரநுபூதி முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரார்த்த நியமம்

இறந்தவர்களுடைய ஆன்ம ஈடேற்றத்துக்காகச் சிரத்தையுடன் இயற்றும் கிரியைகளே சிராத்தம் எனப்படும். ஒவ்வொரு மதத்தினரும் ஏதோ ஒரு விதத்தில் பிரிந்தவர்களின் ஆன்மா சாந்தியடையவதற்கெனச் சில கிரியைகளையோ பிரார்த்தனைகளையோ செய்து வருகிறார்கள். எங்கள் வைதீக நூல்கள் சிராத்தத்தைப் பற்றி கூறியுள்ளவைகளில் பின்வருவன கவனிக்கப்படவேண்டியவை

சிராத்தம் செய்பவர்கள் இயலுமான வரையில் தங்கள் சொந்த வீடுகளிலேயே செய்துவர வேண்டும். சிரார்த்தத்திற்குப் படைக்கப்படும் உணவு வகைகளும் கூடியவரையில் சிரார்த்தம் செய்பவரின் மனைவி அல்லது நெருங்கிய உறவினராலேயே தயாரிக்கப்பட வேண்டும். அன்னியர் வீட்டில் சிரார்த்தம் செய்தாலும் மனைவி தவிர மற்றவர் பாகம் செய்தாலும் சிரார்த்தம் செய்தாலும் செய்பவர் பித்ருக்களையே புஜிப்பதாகும். பித்ருக்கள் புத்திரனுடைய வீட்டிற்கே வந்து அங்கு சிரார்த்தம் செய்யாததால் கோபங்கொண்டு, இவன் ஏழையாகிய பல புத்திரர்களைப் பெறட்டும் பூதப்பிரேத பிசாசுங்கள் இவனது சந்ததியைப் பீடிக்கட்டும் என்றும் சபிப்பார்கள். பித்ருக்கள் கோபங்கொண்டால் பஞ்சுப்பொதியைத் தீ ஒரு நிமிஷத்தில் எரிப்பதுபோல அந்த வம்சம் உடனேயே அழியும் விதிப்படி செய்யாததும், அன்னியர் பாகம் செய்ததும், பிறர் வீட்டில் செய்ததும், தட்சணை இல்லாததும், நீசனானவர் திரவியத்தில் செய்வதும் வேகமாகச் செய்வதும் அழுக்குள்ள காய்கறிகளால் செய்வதும் தேன் உழுந்து இல்லாததும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்யாததுமான சிரார்த்தம் நஷ்டமாகும் பித்ருக்களுக்குத் திருப்தியைத் தராது, ஆகையால் நன்கு விசாரித்துச் சிரத்தையுடன் அமைதியாகச் சிரார்த்தம் செய்தல் வேண்டும். வேதவிதிப்படி செய்யாத சிரார்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுர சிராத்தமாகும். அந்த வம்சத்தில் பிறக்கும் புத்திரர்கள் நாஸ்திகர்களாகவும் வைதீக ஆசாரமில்லாதவர்களுமாக இருப்பார்கள். பித்ருகணங்கள் கோபம் கொண்டால் அந்த வம்சமே அழியும் ஆதலால் ஆபத்துக்காலத்திலும், சிராத்தம் செய்ய விதிமுறைப்படி சிரார்த்தம் செய்பவர்களுக்கு இன்மை மறுமைகளில் பெரும் பயன் கிடைப்பதோடு அவர்களின் வம்சத்தினரும் தலை சிறந்து விளங்குபர் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

பண்டிதர் து. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
புன்னாலைக் கட்டுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிராத்தம் சம்பந்தமான சில பொது விஷயங்கள்

## வினா விடை

1] வினா சிராத்தத்தை எப்படி செய்ய வேண்டும்?
விடை சிராத்தகாரியங்களை மிகவும் சிரத்தையுடனும் நம்பிக்கை வைத்தும் பயபத்தியாக ஆறுதலாகச் செய்தல் வேண்டும்

2] வினா யார்யார் சிராத்த தினத்தில் சமையல் செய்யலாகாது?
விடை வீட்டுத்தூரம் வரும்நாள் அண்மித்த பெண்களும் கர்ப்பிணியும் நோயாளிகளும் சமைக்கலாகாது

3] வினா சிராத்தம் செய்ய வசதியில்லாதவன் யாதுசெய்யலாம்?
விடை பொருள் வசதி இல்லாதோன் காய் கனி கிழங்கு எள்ளு தட்சணை இவற்றைதானமாக கொடுக்கலாம் இதுவும் இல்லையேல் அந்தணரை வலம் வந்து திலதருப்பணம் செய்து போசனம் செய்யலாம் இதுவும் இல்லையேல் பசுக்கூட்டத்துக்கு புல்லையாயினும் கொடுக்கலாம்

4] வினா சிராத்தத்தை எங்கு செய்ய வேண்டும்?
விடை தன்வீட்டிலாயினும் திருநந்தவனத்திலாயினும் புண்ணிய தீர்த்தக் கரையிலாயினும் பசுச்சாணத்தினால் சுத்தி செய்த இடத்திலும் சிரார்த்தம் செய்யலாம்

5] வினா சிராத்த தினத்தில் யாது செய்யவேண்டும்?
விடை திருக்கோயிலே அபிஷேகம் செய்வித்தல் நெய்விளக்கு ஏற்றுதல் அன்னதானம் செய்தல் உகந்தது

6] வினா சிராத்த நாளில் யாது செய்யக்கூடாது?
விடை நெல்குத்துதல் பிச்சையிடுதல் தயிர்கடைதல் நெய்வாங்குதல் அல்லது கொடுத்தல் என்பன ஆகாதகாரியம்

7] வினா கொள்ளி வைத்தவர் சிராத்தமுதன் நாளும் அன்றும் மறுநாளும்யாது செய்தல் கூடாது?
விடை சௌரம் செய்தல் பாரம்சுமத்தல் எண்ணெய் தோய்த்து கொள்ளுதல் பலதடவை சாப்பிடுதல் காமமடைதல் என்பன செய்யக் கூடாத காரியங்கள்

8] வினா சிராத்த தினத்தில் சமைப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்?
விடை சிவதீட்சை பெற்றவரும் சிராத்தம் செய்யமுன் புசிக்காதவராயும் தாம்பூலம் தரிக்காத வராயும் இருக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9] வினா சிராத்தத்துக்கு உபயோகிக்கும் பொருட்கள் எவை?

விடை எள்ளு இஞ்சி நெல்லரிசி சோதுமை சிறுபயறு உழுந்து சர்க்கரை தேன் பசுநெய் பசுப்பால் பசுந்தயிர் எண்ணெய் உப்பு புளி மிளகு சீரகம் மஞ்சள் கடுகு இளநீர் வாழையிலை வாழைத்தண்டு வாழைப்பழம் மாங்காய் மாம்பழம் பலாக்காய் பலாப்பழம் தேங்காய் புடலங்காய் அவரைக்காய் பாகற்காய் எலுமிச்சம்பழம் நெல்லிக்காய் சிறுகிழங்கு கீரை வள்ளிக்கிழங்கு முல்லை முசுட்டை பிரண்டைகாரை? கருவேப்பிலை வெற்றிலை பாக்கு ஏலம் சுக்கு கராம்பு சாதிக்காய் என்பன பாவிக்கலாம்

10] வினா சிராத்தத்துக்கு பாவிக்கக் கூடாத பொருட்கள் எவை?

விடை கடலை பீர்க்கங்காய் நீற்றுப்பூசனி சுரக்காய் கத்தரிக்காய் அத்திக்காய் முருக்கங்காய் வாழைப்பூ வெண்காயம் வெள்ளைப்பூடு கொவ்வை எருமைப்பால் தயிர் ஆட்டுப் பால் தயிர் சவ்வரிசி மைசூர்பருப்பு என்பன சிராத்ததினத்தில் பாவிக்கக்கூடாத பொட்களாம்

11] வினா சிராத்தத்துக்கு பாவிக்கும் பூக்கள் எவை?

விடை செவ்வரத்தை துளசி வில்வை தாமரை அறுகு நந்தியாவட்டை என்பன

12] வினா பிண்டம் சேர்ப்பதற்குரிய பொருட்கள் எவை?

விடை இடித்த அரிசிமா எள்ளு அரைத்து உழுந்துமா நெய் தேன் வாழைப்பழம் பால் தயிர் சர்க்கரை துளசிபத்திரம் என்பனவாகும்

13] வினா ஒருவர் இறந்தால் கொடுக்க வேண்டியதானங்கள் எத்தனை?

விடை இருபத்தியேழு ஆகும் (27)

14) வினா அவற்றை விளக்குக?

விடை
1) நவசிராத்த தானம்
2) சம்மிதா தானம்
3) ஏகோத்தர விருத்திதானம்
4) இடப தானம்
5) ஏகோதிஸ்ட தானம்
6) இறந்த நாள் முதல் 27 நாள் மேல்மூன்றுநாட்களுக்குள் ஊனமாசிகம்
7) 2ம் மாத மாசிகம்
8) இறந்த நாள் முதல் 40 நாள் மேல் 5நாட்களுக்குள் திரைபக்கமாசிகம்
9) 3ம் மாத மாசிகம்
10) 4ம் மாத மாசிகம்
11) 5ம் மாத மாசிகம்
12) 6ம் மாத மாசிகம்
13) இறந்த நாள் முதல் 170மேல் 10நாளுக்குள் ஊனசான்மாசிகம்
14) 7ம் மாத மாசிகம்
15) 8ம் மாத மாசிகம்
16) 9ம் மாத மாசிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) 10 மாத மாசிகம் 18) 11ம் மாத மாசிகம்
19) 12ம் மாத மாசிகம் 20) இறந்த நாள் முதல்
21) நந்திதானம் 345ன் மேல் 15 நாளுக்
22) மகாகாளதானம் குள் ஊனாப் திமாசிகம்
23) பிதிர் தானம் 24) அதிதி தானம்
25) அப்பிஜாகதானம் 26) சந்தி தானம்
27) சோதகும்ப தானம் என இருபத்திஏழு (27) ஆகும் இவை தேசாச்சார ஒழுங்கில் கிராமத்துக்குக்கிராமம் வித்தியாசமானவை

15] வினா ஏகோதிஸ்டசிராத்தம் ஏன் செய்தல் அவசியம்?

விடை இவ் சிராத்தம் செய்வதனால் பிசாசத்துவம் நீங்குதலும் ஆன்மா பிரேதத்தன்மை நீங்கி சிவலோகம் அடைவதற்காகவும் செய்யப்படுதல் அவசியம்

16] வினா ஏகோதிஸ்டம் எவ்வாறு செய்தல் வேண்டும்?

விடை ஏகோதிஸ்ட சிராத்தத்துக்காத தனி ஒரு அந்தணரை அழைத்து அவருக்கு கர்த்தா அவர்கள் [கொள்ளி வைத்தவர்] இன்னாரது ஏகோதிஸ்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டி அவரை வீட்டு முன்றலில் அழைத்து பாதப்ரக்ஷாளனம் (சால் அலம்புதல்) கால் கழுவி குடை செருப்பு கொடுத்து வீட்டினுள் அழைத்து ஆசனப்பலகை கொடுத்து ஆசனத்தில் இருத்தி நல் லெண்ணை அரப்பு கேசிக்காய் என்பன கொடுத்து அந் தணரின் கையில் இருதரமும் நிலத்தில் ஒருதரமும் நீர் விட்டு. உபசார பொருளான வேட்டிசால்வை 'கொடுத்து தானஅரிசி மரக்கறிகள் என்பன கொடுத்தும் பாய் தலையணை விசிறி ஜலபாத்திரம் (செம்பு) தீபம் (விளக்கு( முதலான பொருட்களை கொடுத்தும் அவரை வழியனுப்பி விடுவது வழக்கம் பின் ஏனையதானங்கள் நடைபெறும் சிலஊர்களில் ஏகோதிஸ்ட சிராத்தத்தில் முகம்பார்க்கும் கண்ணாடி நீராடுவதற்கு துலாப்பட்டை அல்லது வாளி ரோச்லைற் (மின்விளக்கு) சீப்பு சேட் தொப்பி பொல்லு என்பனவும் கொடுக்படுகின்றது இது தேசாச்சாரத்தின் படி நடைபெறுவதாகும்

17] வினா சிராத்தம்நடை பெறும் போது அனைவரும் யாதுசெய்தல் வேண்டும்?

விடை வீண்வார்த்தை பேசாது தேவாரபதிகங்கள் புராணங் இதிகாசங்கள் தருமசாஸ்திரங்கள் சிவபுராணம் என்பன ஓதுதல் வேண்டும் என கூர்மபுராணம் காமிகாகமமும் செப்புகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18] வினா ஒருவர் இறந்து அபரக்கிரியை செய்யாது விட்டால் (இறந்தபின் செய்கின்ற கிரியை) யாதுநிகழும்?

விடை இறந்த ஆன்மா பிசாசு ரூபம் எடுத்து தனது பிள்ளைகளை பயமுறுத்தியும் சந்ததி இல்லாது செய்தும் கனவிலும் நனவிலும் வந்து கஸ்டங்களை உண்டு பண்ணியும் அந்தரத்தில் அலையும்

19] வினா இறந்த ஆன்மா எப்படி எமபுரிநோக்கி பயணமாகிறது?

விடை சிரார்த்தநாளில் இடும் பிண்டங்களினாலும் பசியைப் போக்கியும் இறந்த ஆன்மாவுக்காக இறைக்கப்படும் எள்ளும் நீருனாலும் தாகத்தைப் போக்கியும் மாசிக பிண்டங்களினால் அங்கங்கள் உருவாகியும் பூரண உருப் பெற்று யமபுரியை நோக்கி பயணமாகி சொர்க்க உலககம் பெறுகிறது

20] வினா பூலோகத்தில் இருந்து எமலோகம் எவ்வளவு தூரம்என சாஸ்திரங்கள் கூறுகின்றது?

விடை எண்பத்துநான்காயிரம் காததூரம் பூலோகத்தில் இருந்து எமலோகம் பயணம் செய்ய வேண்டுமென கூறுகின்றது

21] வினா அப்படி செல்லும் பாதை எப்படிபட்டது என சாஸ்திரம் விவரிக்கிறது?

விடை கத்திகள் இலைகளாக உள்ள பாதையும் செப்பு உருக்கு காந்தும் இடமும் அதிககுளிரும் அதிகவெப்பமும் அதிக இருளும் அதிகஇரத்தமும் பயங்கர மிருகஉயிர்கள் உள்ள இடமும் உண்ணவோ அருந்தவோ கிடையாத இடமான பாதைகளினால் இறந்த ஆன்மா செல்லுமாம்

22] வினா அப்படி எமபுரி செல்லும் வேளையில் இறந்த ஆன்மா எதைநினைக்கிறது என சாஸ்திரங்கள் கூறுகின்றன?

விடை தனது உறவுகளைஎண்ணி எண்ணி அழுமாம் தான்செய்த நல்லவற்றை தீயவற்றை நினைத்து ஏன் நான் தீயவை செய்தேன் பிறர் வாழ்க்கைக்கு கெடுதி செய்தேன் என அழுமாம் நல்லவற்றை செய்யாது போனேனே எனவருந்துமாம் ஆகவே நாம் நல்லவற்றை இவ்வாழ்வில் செய்தல் அவசியம்

23] வினா முன்னைய வயோதிபர்கள் இறந்த ஆன்மா இறந்து ஒரு வருடத்தில் பலமடங்களில் தங்கி செல்லுமென கூறுவார்கள் இது உண்மையா?

விடை இது உண்மைதான் செய்யும் தான கிரியைகளினால் 1] யாமியம் 2] சௌரி 3] கந்தருவம் 4] குரூரம் 5] கிரௌஞ்சம் 6] விசித்திரம் 7] பக்வாபதம் 8] துக்கம் 9] நானாக்கிரந்தம் 10] சுதப்தம் 11] சீதாப்ரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இடங்களில் தங்குவதாகவும் ஜீவன் பிண்டசரீரம் நீங்கி கட்டை விரலளவாய் ஒரு வன்னிமரத்தில் தங்கி பின் நல்வினை தீவினையால் ஒருகருமஉடல் பெற்று எமன்முன் போவதாய் சாஸ்திரம் செப்புகின்றது

24] வினா ஒருவர் இறந்தாலும் இறந்தவருக்கு யாரும் இல்லாதுவிடில் யாது செய்யவேண்டும்

விடை ஒருவர் இறந்தால் உடன் கொள்ளி வைத்தல் முதலான கிரியைகளை செய்தல் அவசியம் அநாதை எவராது இறந்தால் கோவிந்தாக் கொள்ளி என்று யாராவது பலரிடம் வசூல் செய்து பண்ணிவிட வேண்டும்

ஸ்ரீராமபிரான் கபந்தன் ஜடாயு முதலியவர்க்கு ஈமக் கிரியை செய்தாரென்றும் ராஜாஜி கூடஆற்றில் வந்த அநாதைப் பிணத்துக்கு கிரியை செய்தாக நூல்கள் கூறுகின்றது

25] வினா வருடம் வருடம் நடைபெறும் சிராத்தத்துக்கு தேவையான பொருட்கள் எவை?

விடை
1] மஞ்சள்மா சர்க்கரை
2] இஞ்சிக்கிழங்கு வாழைப்பழம்
3] எள்ளு வெற்றிலை
4] பாக்கு பச்சைஅரிசி
5] தானத்து அரிசி மரக்கறிவகை
6] முல்லை முசுட்டை பிாண்டை துளிர்கள்
7] பால் தயிர் தேன் நெய்
8] உழுந்துமா வாழையிலை மாவிலை
9] மாலை சொரிபூக்கள் அறுகு துளசிபத்திரம்
10] இளநீர் பகுச்சாணகம் ஆசனப்பலகை
11 கற்பூரம் சாம்பிரணி ஊதுபத்தி
12] விபூதி சந்தனம்
13] செம்பு குடம் விளக்கு
14] விளக்குத்திரி தேங்காய் எண்ணை
15] சில்லறைக்காசு குரு தெட்சணை
16] தேங்காய் பழவகை
17] படையல் நிவேதனங்கள்

26] வினா சிராத்தத்தில் பிண்டகண்டனம் எனச் சொல்லுவார்கள் இதுபற்றி விளக்கம் யாது?

விடை பிண்டகண்டனம் என்பது ஒருவர் இறந்து 31ம்நாள் செய்கின்ற கிரியை ஆகும் 31ம்நாள் நடைபெறும் கிரியையில் தானங்கள் கொடுக்கப்பின் பிண்டம்போடும் வைபவம் இடம்பெறும் இதில் இறந்தவருக்கும் இறந்தவர் தகப்பனுக்கும் அவர் தகப்பனுக்கும் வம்சா வழிக்குமாக நான்கு பிண்டம் இடப்படும் அதாவது இறந்தவர் இறந்தவர் தகப்பன் இறந்தவர் பேரன் இறந்தவர் வம்சம் என நான்கு இதில் இறந்தவர் பிண்டத்தை பிண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தை கொள்ளி வைத்தவர் தனது கண்களை மூடிக் கொண்டு தங்கக்கம்பியினாலோ அல்லது செப்புக்கம்பியினாலோ அல்லது வெள்ளிக்கம்பியினாலோ அல்லது தர்ப்பையினாலோ மூன்று பகுதி யாக்கி மிகுதி மூன்று பிண்டங்களுடனும் சேர்த்தல் பிண்டகண்டனம் என்பார்கள் (இறந்தவர் பிண்டத்தை பிரித்தல்)

27] வினா ஒருவர் இறந்து 31ம் நாள் கிரியை சனி செவ்வாய்க்கிழமைகளில் 31ம்நாள்வரின் செவ்வாய் சனிவாரத்தில் பிண்டகண்டணம் செய்யக் கூடாது என்று கூறுவர் இது உண்மைதானா?

விடை இல்லவே இல்லை காரணம் ஒருவர் இறந்து அவர் பிள்ளைகள் அத்தினத்தில் செய்தேதான் ஆகவேண்டும் பெறாமக்களோ வேறு கொள்ளி வைத்தவர்களோ செவ்வாய் சனி வாரத்தில் செய்யக்கூடாது

28] வினா வருட சிராத்ததினத்திலும் 31ம்நாள் பூசைவீட்டிலும் வீட்டு முற்றத்தில் நிறைகுடம் வைக்கவேண்டுமா?

விடை ஆம் வைக்கப்படும் நிறைகுடம் எக்கிரியைக்கு என நாம் சிந்திக்க வேண்டும் வருடசிராத்தத்திலும் 31ம்நாள் கிரியைகளிலும் சூரியபகவானுக்காக வைக்கப்படும் கும்பமாகும் சிராத்தம் செய்விக்கும் அந்தணர் உனது தந்தையார் சிராத்தம் செய்யப்போகிறேன் சூரியனே சாட்சி என கும்பிடும் படிதானே கூறுகிறார் அச்சிராத்தம் செய்வதற்கு சாட்சி செய்விக்கும்குருவும் சூரியனும்தான் ஆகாயத்தில் இருக்கும் சூரியபகவானின் பாதகமலங்களில் அப்பூவை போட்டதாக எண்ணி அவ்நிறைகுடத்தை சூரியனாக நினைத்து போடவேண்டும்

சிராத்தம் சம்பந்தமான பொது விஷயங்கள்
வினா விடை ஆக்கம்:

**பிரம்மஸ்ரீ ச. மு. ரவிக்குருக்கள்**

விசவத்தனை முருகமூர்த்தி கோயில்
பண்ணாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# வெற்றியண்ணை வெற்றியண்ணை என்று எங்கள் அப்பா அழைக்கும் பெரியப்பா

நாங்கள் சுவிஸிலிருந்து பண்ணாகத்தில் வந்திறங்கிய தும் "தங்கச்சி வந்திட்டாயாம்மா" என்றுகம்பீரமான குர லில் பெரியப்பா கேட்டசத்தம் காதிலிருந்து மறைய முதல் எங்களிடமிருந்து வைரவப்பெருமான் எங்களின் பெரியப் பாவை ஏன் அழைத்தார்?

வைரவப்பெருமானுக்கு விளக்கு எரித்தது போதும் வைராக்கியமாகவும் ஆரோக்கியமாகவும் இருந்ததுபோதும் வஞ்சகமற்று கலகல வென்று கதைத்தது போதும் பேரக் குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவியது போதும் என்று ஆண்டவன் தன்னுடனே அழைத்து விட்டானோ? வருத் தமாக எங்களின் பெரியப்பாவை வாட்டாமல் பெரியப்பா கஷ்டப்படாமல் கதைத்துக் கொண்டே வைரப் பெருமானி டம் சென்றுவிட்டார்

எங்களின் சிறுவயதுமுதல் பெரியப்பா "தங்கச்சி" என அழைத்துவருவதும் அண்ணா "தங்கச்சியின் பெரியப்பா" எனக் கூறுவதும் எங்களின் காதுகளில் என்றென்றும் ஒலித் தவண்ணம் இருக்கும் பெரியப்பா எங்கள் வீட்டிற்குவந்தால் எங்கள் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியாக இருக்கும் நாங் கள் பண்ணாகத்திற்கு வரும்பொழுது சுறுசுறுப்பாக இருந்த பெரியப்பா வைரவப் பெருமானிடம் உடனே போவார்என எதிர்பார்க்கவில்லை

எங்களின் அப்பா அம்மாவின் திருமண வைபவத்தை மாமாவையுடன் சேர்ந்து நடத்திய பெரியப்பா சகோதரங் களின் திருமண வீடடிலும் வாழ்த்துச் சொல்லி வந்தோ ரெல்லோரையும் வரவேற்று சிரித்த முகத்துடனும் சினேகித பூர்வமாகவும் குற்றங்குறைகள் இருக்காமல் சென்று விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் பெரியப்பாவுடன் சேர்ந்து பெரியம்மாவும் அண்ணாவை அண்ணியவையும் பெரியப்பாவின் விருப்பங்களைப் பூர்த்தி செய்து வந்தீர்கள் உங்களிற்கு அண்மையில் இருந்து எங்களின் அனுதாபத்தை தெரிவிக்காவிட்டாலும் இங்கிருந்து பெரியம்மா அண்ணாவை அண்ணியவை குழந்தைகளுக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு பெரியப்பாவின் ஆத்மா சாந்தியடைய வைரவப் பெருமானைக் கும்பிடுவோம்

பெரியப்பாவின் பிள்ளைகள்
**கண்ணன், தங்கச்சி, தயாளன்**
**குடும்பங்கள்**
*Norway, Switzerland*

---

# அப்புவும் கண்ணுவும்

ஐயகோ! ஐயகோ!
அழைத்துச் சென்றுவிட்டான்
உன்னவன் எந்தையை
கொஞ்சம் பொறுத்துக் கொள்ளச்
சொல்லியிருக்கக் கூடாதா - நீ
விழி நீர் வழிகிறதே
நினைவெல்லாம் சுடுகிறதே
கண்ணு கண்ணு என்று
அழைத்த குரல் அமைதியாகிப் போனதனால்
கேட்ட செவி கேள்வியாகி நிற்கிறதே!
தந்தை பிள்ளை ஊருக்கு நாம்
உள்ளுக்குள்ளே உற்ற நண்பர்
கை ஓங்கி அடித்ததில்லை
கண் சிவக்கப் பார்த்ததில்லை
எங்களுக்குள் எள்ளவும் கசப்பில்லை
இன்ப துன்பம் இரண்டினையும்
இணைந்தளித்த எந்தையே
வந்து உம்மை தரிசிக்க
வாய்த்த பத்து நாட்கள் தான்
எஞ்சிய என் வாழ் நாளின் இன்பங்கள்
அலைகடல் தாண்டி பல மைல் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய தேசத்தில் அநாதைச் சிறுவனாய்
தெரியாத தேசம் புரியாத மொழி
துன்பங்கள் பல சுமந்து சோகமாய்
வாழ்க்கை போராட்டத்தில் எத்தனை காலம்
அத்தனைக்கும் ஒத்தடமாய் அப்பு
சொல்லி வைத்த நம்பிக்கைகள் எத்தனை
அதிகாலை தொலைபேசி மணி கிலுங்க
அப்புவாக்கும் என்று வந்து எடுப்பேனே
கண்ணு என்றழைக்கும் அந்த
அப்புவின் குரலோசை கேட்டதுவும்
என்னப்பு எப்பிடி அப்பு இருக்கிறியள்?
இப்படியே அப்புவும் கண்ணுவும்....
ஏன் இந்த நாட்கள் இன்னும் கொஞ்சம்
நிலைத்து நீடித்திருக்கக் கூடாதா
கொடுப்பதனால் மட்டுமே
உறவுகள் நிலைத்திடும் என்ற
உண்மையை உணர்ந்து வாழ்ந்த
என்னருமைத் தாய் இன்று
தனித்தனளா? இல்லை தவித்தனளா?
இல்லை! இல்லை!! உம்மை கொடுத்தனள்
விசவத்தனை முருகன் திருவடியில்
நிலைத்திருக்க
பெற்றெடுத்த பிள்ளைகளால்
பெருமை காணத் தவறிடினும்
சிறுமை ஏதும் கண்டதில்லை
அதுவரையில் நிம்மதியும்! அமைதியுமே!!
நிறைவுற்ற பரம்பரையை
நிலையாகப் பெற்றுவிட்ட நிம்மதியில்
அமர சீவியம் பெற்றுச் சென்ற
என் அருமைத் தந்தையே
கருணையுள்ள ஆலடி வைரவர் திருவடியில்
காலமெல்லாம் சீவித்திருக்க வேண்டுகிறேன்
வார்த்தைகள் ஆயிரம் வந்து குவுகிறதே
நினைவுகள் கோடி நின்று சிரிக்கிறதே
எதுவென்று நான் சொல்வேன்
எல்லாமும் என்னோடு வாழட்டும்
அப்பு இன்புற்று இறைபாதம் வாழட்டும்

இறை வீட்டில் அப்பு
இன்புற்றிருக்க வேண்டி நிற்கும்

அன்பு மகன் வெ வேலழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமை மாமா

என் முகம் தெரியாமலே
என் குணம் அறியாமலே
என்னை மருமகளாய் ஏற்று
பெருமையுடன் பேசி மகிழ்ந்த
என் அருமை மாமா- உங்களை
நேரில் பார்த்து பேசி மகிழ்ந்த
நாட்கள் என்றும் என் நினைவுகளில்
நிலைத்திருக்கும் மனதில் நிறைந்திருக்கும்
இயற்கையோடு கலந்து விட்ட நீங்கள்
உறவுகள் நெஞ்சங்களோ இணைந்திருக்க
இறைவனை வேண்டி நிற்கிறேன்

அன்புடன் மருமகள்
வே. அருணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# விசவத்தனை வேலவனுக்கு நல் திருப் போடு சேவை செய்த வெற்றிவேலு

பண்பாளர் பலர் வாழ்ந்த எங்கள் பண்ணாகம் கிராமத்தில் விசுவநாதர் பரம்பரையில் பிறந்தவர் அமரர் வெற்றிவேலு அவர்கள் நல்ல குடும்பத்தில் பிறந்த இவர் நல்ல குணங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தார் இல்லறமாம் நல்லறத்தை இனிதாக நடத்தியதில் நன் மக்கட் பேறையும் பொருட் செல்வத்தையும் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தார்,

சொந்த வாழ்க்கையை மட்டும் ஈடேற்று வதில் கருத்தாக இருக்காமல் பொது வாழ்விலும் பங்கேற்று நல்ல பல பணிகளைச் செய்துள்ளார் இவற்றில் குறிப்பாக பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையில் செயலாளர், பொருளாளர், முகாமையாளர் போன்ற பதவிகளைத்திறப்படச் செய்து பெருமையைப் பெற்றார் மற்றும் ஆலயத்தில் நடைபெறும் புராணப்படிப்பு திருவாசகம் முற்றுமோதல் போன்ற நிகழ்வுகளில் பக்திபரவசத்தோடு பங்கேற்றுப் பாடித்துதிப்பதில் வல்லவராகவும் விளங்கினார் எங்கள் ஆலயத்தில் மட்டும் இல்லாமல் அயலூார் ஆலயங்களுக்கும் சென்று திருமுறைகளை ஓதும் மனப்பாங்குடையவர்

இவர் தம் இறுதிக் காலத்தில் தினமும் மாலையில் ஆலயப்பூசையில் கலந்து வழிபடும் பேறு பெற்றார் இவரின் இழப்பு குடும்பத்தவர்களுக்கு மட்டும் இல்லாமல் எம் ஆலயத்துக்கும் கிராமத்துக்கும் பெரும் இழப்பாகும் நியமித்த நேரத்துக்கு மிஞ்சி கெஞ்சினாலும் இங்கே யாரும் இருக்க முடியாது இது இறைவன் இட்ட கட்டளை

எனவே எங்கள் வெற்றியர் தம் பிறவிப் பயனை வெற்றியாக முடித்துக்கொண்டு அந்த வெற்றி வேலவரிடம் போய்ச் சேர்ந்து விட்டார் அவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல எங்கள் விசவத்தனை வேலவனை பிராத்திப்போமாக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பரிபாலன சபை

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அமரரது சமூகத் தொண்டும் சமயப் பணியும்

அரிது அரிது மானிடராக பிறத்தல் அரிது என்ற ஔவையாரின் கூற்றுப்படி எல்லா உயிர்களிலும் சிறந்த பிறப்பு மானிடப்பிறப்பு. இவற்றின் மூலம் ஆண்டவருடன் இரண்டறக் கலக்கும் தன்மையை நாம் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். மரம், செடி, கொடிகள், பறவைகள், மிருகங்கள் மனிதனுக்கு ஏதோ ஒரு வகையில் வாழ்க்கைக்கு உதவியாக இருந்து வருகின்றது. இதை நாம் சிறிது ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் ஐந்து அறிவு படைத்த தாவரங்கள் பிராணிகள் இந்தப் பூமியில் எவ்வளவோ நன்மைகள் செய்து வரும் பொழுது ஆறறிவு படைத்த மனிதன் இதை விடமேலாகச் செய்ய வேண்டும் அல்லவா?

இதன் தன்மையை உணர்ந்த அமரர் சின்னத்தம்பி வெற்றிவேலு திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் எழுது வினைஞராகவும் இருவடி நிலைப் பாடசாலையில் ஆசிரியராகவும் பணி புரிந்த காலத்தில் மாணவர் கல்வியில் உயர்நிலை அடையவேண்டும் என்ற நோக்கில் கடமையாற்றி வாழ்ந்தார்.

பின்பு சமூக நலன் கருதி சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் முகாமையாளராகவும் கிராமத்திலுள்ள அபிவிருத்திச்சங்கம் பரிபாலனசபை என்பவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்து மக்களுக்கு தொண்டாற்றி வந்த அமரர் சின்னத்தம்பி வெற்றிவேலு அவர்கள் வழக்கம்பரை அம்மன் கோயிலுக்கு சரீரஉதவி நிதிஉதவி புரிந்து சைவசமயத்தவர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அமரர் அவர்கள் தனது வீட்டுற்கு அருகிலுள்ள குலதெய்வமாகிய ஞானவைரவர்மீது அளவு கடந்த நம்பிக்கையும் பக்தியும் உடையவராக தனது இறுதிக் காலத்தில் வாழ்ந்து வந்தார்.

இவரின் சாந்தகுணம் இனிமையான பேச்சு மற்றவர்களுடன் பண்பாகப் பழகும் தன்மை எல்லாம் இவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. அதே போல அமரர் சின்னத்தம்பி வெற்றி வேலு அவர்கள் தனது புதல்வர்கள் நால்வருக்கும் சைவத் தொண்டும் சமூகத் தொண்டும் செய்து கடமை கண்ணியம் கட்டுப்பாடுகளுடன் வாழ வேண்டும் என்று வழிகாட்டியாக வாழ்ந்துகாட்டி இறைவனடி சேர்ந்துள்ளார் அவரை எம்மால் மறக்க முடியாது அவரது ஆத்மா சாந்தி அடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**க. இரத்தினேஸ்வரன்**
அதிபர்
யா/பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை
காலையடி பண்டத்தரிப்பு

---

# வெற்றியண்ணரின் வெற்றி(டம்)

ஆயிரம் வார்த்தைகளை விட ஒரு புன்னகையே மேலானது என்னும் அரிய தத்துவத்தை வாழ்ந்து நிரூபித் தவர் எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்குரிய அருமை அண்ணர் வெற்றிவேலு அவர்கள்.

நாட்டுயர்வுக்கு மூலகாரணமான கூட்டுறவுத் துறையில் நீண்டகாலம் நற்பணிபுரிந்த வெற்றியண்ணர் குறித்து மறைந்தும் மறையாத என்னுயிர்த் தந்தை அன்று கூறிய உரிய கருத்து இன்றும் என் மனதில் மறையாது நிறைந்து நிற்கிறது வெற்றி சிந்தும் புன் சிரிப்பில் எந்தச் சிக்கலும் வந்த வழியே போய்விடும் எனஎனது தந்தையவர்கள் என்னிடம் அடிக்கடி கூறுவ துண்டு இதனை உறுதிப்படுத்தும் வகையில் அண்ணரவர் களின் செயற்பாடுகள் அமைந்ததை அவதானித்த நான் அதிசயித்தேன்.

வெற்றியண்ணரின் புனித சேவை பெறாத எந்தச் சமூக நிறுவனமோ தெய்வீகத் தொண்டு காணாத எந்தச் சமயத் தாபனமோ எங்கள் இனிய ஊரில் இல்லை என் பது வரையறுக்கும் வகையில் எம் மவருடன் இரண் டறக் கலந்து விட்டவர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் நடுவே பழுத்த முதியவராகவும் முதியோர் மத்தியில் வசீகர இளைஞராகவும் விளங்கி எமை வழிப்படுத்திய ஒரு வித்தியாசமான வரலாறு இவருக்கே சொந்தம்

நல்லவரை நாம் இழப்பதும் வல்லவர் எமைவிட்டு இழப்பதும் இன்றைய எமது வருத்தமான வாடிக்கை அல்லது வாடிக்கையான வருத்தம் இந்த வரிசையில் இன்று இணைந்திருப்பவர் அமரர் வெற்றிவேலு அவர்கள்

எனக்கிருந்த ஒரே மைத்துனரும் என்னைவிட்டுப் போய்விட்டார் என அன்னாரின் மறைவினை யொட்டி உயர்திரு சி ஞானச்சந்திரமூர்த்தி அண்ணர் எனக்கெழுதிய கண்ணீர் வரி எனது இதயத்தை அதிர வைத்து இரத்தத்தை உறையச் செய்து முத்துக் குளிக்கும் மைத்துன உறவு இன்று முத்தகத்தையே கலக்கி விட்டது முத்தகம் மட்டுமல்ல அவரிருந்த முழுச்சமூகமே சோகவெள்ளத்தில் நின்று தத்தளிக்கிறது

இழப்பவர் எவரும் தமக்கிணையான வாரிசுகளை விட்டுச் செல்லுவதில்லை என்பது எம்மத்தியில் நிலவும் நீண்ட நாட்குறைபாடு இந்த முறைப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் அன்புடன் நிறைந்த பண்பு மிகுந்த அறிவு கலந்த புதல்வர்களைத் தந்து சென்றுள்ளார் என்பது அவரது மரணத்தின் மகத்துவத்தையே காட்டுகிறது

பன்னிரு விழிகள்கொண்ட விசவத்தனை வேலவனை தரிசிக்கவே தன்னிரு விழிகளுக்குச் சிகிச்சை செய்து கொண்டதாக என்னிடம் அன்று சொன்னார் அண்ணர் இன்று எவராலும் என்றுமே நிரப்ப முடியாத நிலையில் இருப்பது அமரர் வெற்றியின் வெற்றி[டம்]!

பண்ணாகம் சோம திருச்செல்வம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிய வாழ்வில் தனித்துவம் நிறைந்த உத்தமர்

அரிது அரிது மானிடராதல் அரிது என்பது ஔவையின் அருள்வாக்கு எல்லாப் பிறப்பும் பிறந்து ஓய்ந்து அறிவறிந்த மானிடப்பிறப்பை எடுத்தவர்கள் புண்ணியம் புரிந்தவர்கள் இந்தப் புவனியில் போய் பிறவாமல் தமது காலத்தை அவமே போக்குகின்றோம் என அழுது துடிக்கின்றனர் சிவனருள் பெற்று அவனால் ஆட்கொள்ளப்படும் பேற்றினை உடையவர்கள் இந்தப் பூமியில் தோன்றுபவர்கள் பிறக்கும் மனிதர்கள் என்றே ஒருநாள் இறந்துதான் ஆகவேண்டும் பிறக்கும் போது அவர்களது வினைக்கு ஏற்ப வாழ்க்கை வட்டங்கள் பிறக்கும் போகங்கள் நிர்ணயிக்கப் படுகின்றன.

இந்த வகையில் அமரர் வெற்றிவேலு வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து செயற்கரிய பற்பல செயல்களை சைவ சமயத்துக்கும் சமூகத்திற்கும் செய்து பூரணமனிதனாக வாழ்ந்த பெரியார் தனது பிள்ளைகளை நன்னெறியில் வாழர்த்து தக்கார் என்றபுகழுடன் வாழ்ந்தவர் குருமார் பக்தர்கள் பெரியோர்கள் சிறியோர்கள் முதலானோருடன் அன்பாக பேசி கருமங்களை இனிதே நடைபெறச் செய்யும்சிறப்பு இவருக்கு நன்கு அமையப் பெற்றிருக்கின்றது

அமரர் அவர்கள் பண்ணாகத்தை பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் அவர் தன்பிறந்த குடும்பத்தின் உயர் பண்பிற்கு அமையபிற ஊரவர்களோடும் கூடஅன்போடு பழகும் பண்பாளர் ஆவர்

சகல சிறப்பும் நிறைந்த வாழ்க்கை அமைத்து புகழ் பெற்றவர்கள் எழிமையுடன் பெருமையிலாது இருத்தல் அரிதாகிய உலகில் அத்தகைய பண்புகளுடன் இருக்கவும் முடியுமென சான்றக வாழ்ந்து அமரர் அவர்கள்தன் குல தெய்வமாகிய முருகப்பெருமான் மீதுமிகுந்த பக்தியுடையவர் தினசரி மாலைப் பூசைகளில் விசேட உற்சவங்களிலும் கலந்து கொண்டது மல்லாமல் எமது பகுதிகளில் எங்கு எங்கு எல்லாமோ கும்பாபிஷேகம் சங்காபிஷேகம் மஹோத்சவம் என்பன நடைபெறுகின்றதோ அங்கேஎல்லாம் வெற்றிவேலு அவர்களை காணக்கூடியதாய் இருக்கும் அமரரது ஆன்மா

முருகப்பெருமான் திருவடிநிழலில் அமைதியுறுகிற வேளை யில் அவர் குடும்பத்தினர் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் ஆறுதல் கூறிஅவர் பணியினை தொடரவும் கல்வி இறைபக்தி குருவிஷ்வாசம் முதலிய பண்புகள் வளர வும் சிறப்புற துதிசெய்து அவரதுஆன்மா சாந்தியடைய முரு கப்பெருமான் பாதகமலங்களை பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**பிரம்மஸ்ரீ ச, மூ, ரவிக்குருக்கள்**
பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில்

---

உ

# இனிய பண்பாளன்

வையத்துள்ள வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்தினுள் வைக்கபடும்

அன்பும்- பண்பும் அடக்கமும் ஒழுக்கமும் உயர்வும் தாழ்வற்ற மனப்பான்மையும் கொண்ட ஒரு பண்பாளர் உயர்திரு சின்னத்தம்பி வெற்றிவேலு அவர்கள் என்றால் மிகையாது தனக்கெனவாழா பிறருக்குரியாளன் தமக்கு தம் குடுபத்துக்கும் என வாழாது பிறர் நன்மைக்காக வாழ்ந் தவர் அவருடைய பெருமைகளை அடியேன் கூறமுடியாது

அனைவருக்கும் நண்பனாய், நல்லாசானாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் இறைபக்தியாய் உள்ளம் புனிதமாய் உடைபுனிதமாய் உணவுபுனிதமாய் ஒன்றோடு ஒன்று பின்னி பிணைந்தவராக தெய்வீக அருள் பெறப்பட்டவர் மற்றவர்கட்கு புத்திமதிகூறி இன்சொல் வழங்கி புனிதவராக திகழ்ந்து நன்மக்கட் பேறுகளைப் பெற்று பேரப்பிள்ளைகளையும் கண்டு கழித்து இன்புற்று விருந்தோம்பல் செய்து எல்லோருடனும் அன்பாக பேசி நேசக்ரம் நீட்டி பண்புடனே வாழ்ந்த ஒரு உத்தமர் அவரை திடீர் என காலன் கவர்ந்துவிட்டார் அவரது ஆன்ம சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டு கின்றேன்.

**இ. சரவணபவன்**
அராலி மத்தி வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை வித்தகன் அமரர் வெற்றிவேலு

அமரர் அவர்கள் சிவபதம் அடைந்ததை அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியில் எனது இதய அஞ்சலியை செலுத்துவதில் பெருமையடைகிறேன்

அமரர் அவர்கள் சின்னத்தம்பி வெள்ளிமலையின் கனிஸ்ட புத்திரன் இருவருக்கும் இருசகோதர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர் நான் அறிந்தபட்டில் அமரர் அவர்கள் கல்விமான் சமயப் பற்றுடையவர் சமூகத்தொண்டர் இவர் மெய்கண்டான பாடசாலையில் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தி எய்தி முதலில் திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிகலாசாலையில் எழுது விளைஞராகக் கடமையாற்றினார் அதன் பின் சிறிது காலம் திருவடிநிலைப் பாடசாலையில் ஆசிரியராக தொழில் புரிந்தார் அதன் பின் கூட்டுறவுத் பயிற்சி பெற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்ககிளைமுகாமையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றா மூகாமையாளராக கடமையற்றும் போது எல்லோரது பாராட்டையும் பெற்றார்.

சமயப்பற்றுள்ள அமரர் வெற்றிவேலு வருடாவருடம் அம்மன் கோயிலில் நடைபெறும் திருவாசகம் முற்றோதலில் பங்கு கொள்ள தவறுவதில்லை விசவத்தனை முருகனின் முறையான பக்தனாக விளங்கிய அமரர் உடல்நலக்குறைவிலிருந்த போதும் மாலைப்பூசையில் கலந்து கொள்ளத்தவறுவதில்லை தினமும் ஆலடி பைரவருக்கு நெய்விளக் கேற்றி வழிபட்டார்

அமரர் அவர்களின் சமூகத்தொண்டு பலதரப்பட்டது ஐக்கியநாணய சங்கம் ஆலயபரிபாலனசபை கிராமம் அபிவிருத்திசங்கம் என்பவற்றின் நிர்வாகத்தில் உரிமை பெற்று சமுகமேம்பாட்டுக்காக அயராது உழைத்தார் அவர் கடமையாற்றிய அமைப்புகளில் தனது முத்திரையை பதிந்ததை நான் அறிவேன் மாணம் இயற்கையின் நியதி தவிர்க்க முடியாதது முடிசார்ந்த மன்னரும்மற்று முள்ளோரும் முடிவிலோர் பிடிசாமபல் ஆவர் என்பது அழியாத உண்மை என்றாலும் நம் மால் நேசிக்கப்படுவர் மரணிக்கும் போது அதைதாங்கும் சக்தி எமக்கு இருப்பதில்லை

வகுத்தான் வகுத்தவகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்தல் அரிது என்றவள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கிணங்க எல்லாம் அவன் செயல் எனது அமைதி அடைவோம் அமரர் அவர்கள் பூரணவாழ்வு வாழ்ந்து நன்மக்களை பெற்று அவர்களின் அரவணைப்புடன் வாழ்ந்து வெற்றிவேலு நல்லவர் என்ற பெயரைப் பெற்று அமரத்துவம் பெற்றார்

அமரரின் ஆன்மா வழுக்கம்பரை முத்துமாரியம் மனின் பாதங்களைச் சரணடைந்திருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை நாம் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்போமாக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**சிவஸ்ரீ ஈ, சுந்தரராஜக்குருக்கள்**
வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகத்தில் ஓர் பண்பாளன்
# அமரர் வெற்றிவேலு அவர்கள்

இவ்வுலகு [பிரபஞ்சம்] நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது ஆனால் இவ்வுலகு இயக்கத்திற்கு அடிப்படையானவற்றுள் முக்கியமானது நல்ல பண்புள்ள மக்கள் ஆகும், கருங்கக் கூறின் நல்ல பணபுள்ள உள்ளங்களின் கூட்டுச் சேர்க்கையினாலேதான் இவ்வுலகு இயங்குகின்றது எனலாம் இவ்விதம் நல்ல பண்புள்ள மக்கள் தோன்றவில்லையெனில் உலகம் இயங்காது மண்ணோடு மண்ணாகி விடும்.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்னும் திருவள்ளுவர் வாக்கால் உணர்வோம்

அமரத்துவம் எய்திய வெற்றி என்று அன்பாக அழைக்கப்படும் சின்னத்தம்பி வெற்றிவேலு அவர்கள் நற்குடும்பத்திலே பிறந்து இளமைக்காலந்தொட்டு இறைபக்தி உள்ளவராகவும், நற்குணங்களுடையவராகவும் விளங்கினார். அமரர் அவர்கள் கூட்டுறவே நாட்டுயர்வு எனும் சித்தாந்தத்திற் கமைய வலிமேற்கு கூட்டுறவு துறையிலே நீண்ட காலம் சேவையாற்றியுள்ளார். சேவைக் காலத்திலே கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றுடன் நீதி, நேர்மை, அன்பு ஒழுக்கம் என்னும் நற்குணங்களைகைக் கொண்டார் இது காரணமாக வலிமேற்கு மக்களின் மனங்களை வெற்றி கொண்டு தமது வெற்றி எனும் நாமத்தை துலங்க வைத்து பண்ணாகத்தின் ஓர் பண்பாளன் ஆனார்

அமரர் அவர்கள் மிகவும் சமயப்பற்றுள்ள ஒருவர் இது காரணமாக சமயஅறிவு அவரிடம் நிறையவே காணப்பட்டது தமது குலதெய்வமாகிய விசவத்தனை முருகப்பெருமானிடம் மிக்க பக்தி கொண்டவர் அத்தோடு சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர், பறாளாய் முருகன், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆகிய தலங்களுக்கு சென்று வழிபடத் தவறுவதில்லை பிற்காலத்திலே பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலய பரிபாலன சபையிலேபதவி வகித்து நீண்டசேவையை ஆற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார் இன்னும்பலசமய சமூக சேவைகளைச் செய்து சிறப்படைந்துள்ளார். சுழிபுரம்-பறாளாய் தேவஸ்தான எமது நாட்டுப்பிரச்சனை சம்பந்தமான ஈசுரவிநாயகரின் தரிசனங்களின் துண்டுப்பிரசுர வெளியீடுகளை தமது ராஜா பதிப்பகத்திலே துணிச்சலுடன் அச்சிட்டு வெளியிடுவதில் எமக்கு அளப்பரிய உதவிபுரிந்துள்ளார். அதனால் இன்று நாம்ஓர் ஆன்மீகப் போராட்டப் பிரச்சாரத்தை நாட்டில்முன் எடுத்துச்செல்ல வழிகிட்டியது எனலாம்.

பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமானின் கிருபையால் இவர்நல்ல வாழ்க்கைத் துணைவியைப் பெற்றார் அத்தோடு நல்லபிள்ளைகள் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார் தமதுபிற்காலத்திலே நோய்வாய்ப்பட்ட வெற்றிவேலுவை-விசவத்தனை வெற்றிவேல் தமது திருவடிக்கு அழைத்துவிட்டார்

அமரரின் பிரிவால் துயருறும் அருமைமனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உறவினர்கள் அனைவர்க்கும் சுழிபுரம் பறாளாய் ஈசுரவிநாயகர் ஆறுதல் அளிப்பாராக அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

சாந்தி! சாந்தி! சாந்தி!

ஈசுர விநாயகர் தேவஸ்தானம் பறாளாய் சுழிபுரம்.

சோதியூரான் பிறைசூடிக் குருக்கள் [சந்திப் பூசகரும் ஓய்வு பெற்ற ஆசிரியரும்]



# அளப்பில் கீதம் பாடி அமரவாழ்வு எய்திய அன்பர் திரு சி. வெற்றிவேலு அவர்கள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து அமரவாழ்வு எய்திய அன்பர் திரு சி. வெற்றிவேலு அவர்கள் வாழ்ந்த காலசம்பவங்களை நாம் ஒருநிமிட நேரம் நினைவுகொண்டு பார்ப்போம்.

※ தினமும் காலை மாலை வேளைகளில் பண்ணாகம் ஆலடிவைரப் பெருமான் விசவத்தனை முருகப்பெருமான் வழிபாடுகளை நிறைவு செய்வதை நியமமாகக் கொண்டு இன்புற்றவர்

※ கூட்டுறவுத் துறையில்கடமையாற்றி ஓய்வுபெற்று கிராமப்பொதுப் பணிகளில் தம்மால ன பதவிகளை வகித்து பணிபுரிந்தவர்

※ திருமுறை ஓதல், புராணபடனங்களில் பங்குகொள்ளல். அயல் கிராமங்களில நடைபெறும் சமயவிழாக்களில் ஈடுபாடுடையவராக விளங்கிவந்து மகிழ்ந்வர்

※ ஆலடிவைரவப் பெருமான் ஆலயத்தில் பன்னிருதிருமுறைப்படிப்பு திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்வுகளை தலைமை தாங்கி நடாத்தி இன்புற்றவர்

※ ஆலடிவைரப் பெருமான் மேல் பண்டிதர். அ. ஆறுமுகம் மூலமாக ஊஞ்சல்பாடி நூல்உருவில் அச்சிட்டு வெளியிட்டு யாவரையும் மகிழ்வித்தவர்

※ தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் அபிராமிராமியந்தாதி பாடல் ஆய்வுரைகருத்தை மாதம்தோறும் வெளியிட்டு பரப்ப எமக்கு உறுதுணையாக இருந்து உதவியதுடன் தமது செலவில் இருபாடல்களை அச்சிட்டு உதவியவர்

※ மனைவி மக்களுடன் நிறைவான வாழ்வு வாழ்ந்து பேரப்பிள்ளைகளுடன் மழலை இன்பம் அடைந்தவர்

※ நாம்வீடு சென்றவேளையில் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து தேநீர் தந்து மகிழ்வார் இறப்பதற்கு சிலதினங்களுக்கு முன்பாகதா குணம்மடைந்த விசவத்தனை முருகப்பெருமானை சென்று வணங்க வேண்டும் என்ற ஆசையை எமக்கு வெளிப்படுத்தியிருந்தார் 19.1.2002 சனிக்கிழமை இரவு வேலவர் இவரது ஆசைநிறைவு பெறவைத்துள்ளார்

அன்பருக்கு அன்பனே வேல் வேல் முருகா; வெற்றிவேல் முருகா !!

நாம் இந்த பிறவியை எடுத்தது உம்மை வணங்கி முத்தி இன்பம்பெறும் பொருட்டேயாகும் அன்பர் திரு சி. வெற்றிவேலு அவர்கள் இந்த பெரும் பேற்றை பெற்றுவிட்டார் முருகன் பாதங்களைப் பற்றிக் கொண்டு பெருவாழ்வு வாழ நாம் யாவரும் பிரார்த்திப்போம் இவரது பிரிவால் வருந்தும் மனைவி பிள்ளைகள் உறவினர்கள் யாவருக்கும் ஆறுதல் கூறி, ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போம்.

பண்ணாகம்
சுழிபுரம்

க. வாமதேவன் J. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வெற்றிவேலுவும் இறை பணியும்

சிவ பூமியாகிய இலங்கைத் திருநாட்டின் சிகரமாக இருக்கும் யாழ்ப்பாணத்தில் சைவமும்தமிழும் வளர்ந்தோங்கும் பண்ணாகம் என்னும் கிராமத்தில் பெரியார் சின்னத் தம்பி வெள்ளிமலை தம்பதிகளின் தலைப்புதல்வனாக பிறந்தவர்தான் அமரர் வெற்றிவேலு அவர்கள்

இவர் தமது கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் திறமையாகக் கற்று முடித்தபின் உத்தியோகம் புருஷலட்சணம் என்பார்கள் இதற்கிணங்க சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் கிளை முகாமையாளராக பதவி பெற்று தனது கடமையை சரிவரச் செய்து பாராட்டுப் பெற்று தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றார்.

இதன் பின் மானிடப்பிறவியின் பயனைப் பெறும் நோக்கமாக தங்கள் குல தெய்வமாகிய பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலய பரிபாலன சபையில் செயலாளராகவும் பொருளாளராகவும் பதவி வகித்து இறைபணி செய்து வாழ்ந்தவர் இத்துடன் பல சமூகப் பணிகளிலும் தம்மை அர்ப்பணித்தவர் அடியேன் விசவத்தனை முருகன் ஆலயத்தில் காலத்துக்குக்காலம் புராணங்களுக்கு பயன் கூறும்போது தானும் கலந்து கொண்டு எனக்கு உதவியாக பாடல்களை இலக்கண இலக்கியப் பிழைகள் இல்லாமல் பொருள் விளங்கப் பிரித்து வாசிக்கும் தகுதி பெற்றவர் இத்துடன் ஆவடி பைரவர் ஆலயத்தில் வருடா வருடம் பன்னிரு திருமுறைகளையும் மூன்று மாதத்தில் படித்து முடிப்பவர் இத்துடன் சகலருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பண்பாகவும் உரையாடுவார்.

அமரர் வெற்றிவேலு அவர்கள் மேலும் பலவற்றால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்று சொல்வதில் பிழை இல்லை அன்னாரது ஆன்மா விசவத்தனை முருகப் பெருமானின் தாமரைமலர் போன்ற திருவடியில் சேர வேண்டுமென்று எல்லாம் வல்ல சண்முகப் பெருமானை வணங்குகின்றேன்.

புராணபடன உரையாசிரியர்
சைவசித்தாந்த பண்டிதர் செ, சிவபாதம்
பணிப்புலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி உரை

## அமரர் அவர்களின் மைத்துனன்

## சி. ஞானச்சந்திரமூர்த்தி

பெரியோர்களே! தாய்மார்களே! பொட்டிழந்து பூவிழந்து மாங்கல்யமிழந்து நிற்கின்ற எனது ஆருயிர்ச் சகோதரிக்கு முன்னால் அவரது இனிய துணைவனைப்பற்றி நான் என்ன சொல்வதன்றே தடுமாறுகின்றேன். என்றாலும் துணிவைவரவழைத்து மனவைராக்கியத்துடன் எனது அருமைமைத்துனன் அமரர் சின்னத்தம்பி வெற்றிவேலு பற்றி சில வார்த்தைகள் கூறமுனைகிறேன்.

எனது உரை எனது குடும்பத்துக்கும் மைத்துனரின் குடும்பத்துக்கும் மிடையில் வளர்ந்து வந்த பினணப்பைபற்றிய தாகவே அமையும் எனது மைத்துனர் என் அருமைச்சகோதரி சரஸ்வதியை 1956ம் ஆண்டு திருமணம் செய்தார் அன்றுதொட்டு அமரத்துவம் அடையும் வரையும் அவர் எனது குடும்பஅங்கதவர் களில் ஒருவராகவே விளங்கினார்எனது தந்தையாருக்கு அமரர் மரும கனாகமட்டு மல்ல பெறாமகனாகவும் விளங்கினார் ஒருமாமனுக்கு இப்படி ஒரு மருமகனோ என்று எல்லோரும் வியக்கத்தக்கவகை யில் அவர்என் தந்தையாருக்கு மிகுந்த பணிவுடன் பழகினார் 'அம்மான்' என்று அமரர்என் தந்தையை விளிக்கும் போதெல்லாம் நான் அமரரையிட்டு பெருமையடைவேன் என் தந்தையுடன் பழகியதுக்கு மேலாக என்னுடன் பழகினார் 'தம்பி' என்று சொல்லித் தான் என்னை அழைப்பார் அவ்வகையில் எனக்கு அண்ணன் இல்லாதகுறையை அமரர் போக்கினார் அமரர் வெற்றிவேலு என் மீது வைத்திருந்த பற்றையும் பாசத்தையும் நேற்றுமாலை இங்கு வருகைதந்த எனது பால்ய நண்பன் திரு தம்பையா நினைவு படுத்தும் போது எனது மனம் நெகிழ்ச்சியடைந்தது

அமரர் எனக்கு மைத்துனராக வருவதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள் அவரின் மூத்த சகோதரி தங்கம்மாவும் தமையன் கயிலாயமுமாவார் திரு கயிலாயம் 1956ல் திருமணம் பேசி எங்கள் இல்லத்துக்கு வந்தது இன்று போல் ஞாபகமிருக்கிறது. ஏற்கனவே எனது தாயார் மாரிமுத்துவும் அமரரின் தாயாரும் நெருங்கிய நண்பிகளாக இருந்ததை நான் நன்கு அறிவேன் எனது மைத்துனர் எங்கள் குடும்பத்துக்கு வந்த பின் அவரது இனத்தவர் கள் எங்களுடன் நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டனர் இன்றும் எனது இல்லத்தில் நடைபெறும் வைபவங்களுக்கு அமரரின் உறவினரின் பங்களிப்பு நிறைய உண்டு அதையிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

என் மைத்துனன் என்மீது பூரண நம்பிக்கை வைத்திருந்தார் அதற்கு எடுத்துக்காட்டாக அமைவது தனது புதல்வர்களுக்கு பெயர் சூட்டும் உரிமையை பெருந்தன்மையுடன் வழங்கியமையாகும் சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரவர் நால்வரை போல் அவரது நான்கு புதல்வர்களும் அவரது பெயரை விளங்கவைக்கின்றனர் 1957ல் அன்பழகனும் 1959ல் கலையழகனும் 1962ல் அருளழகனும் 1964 ல் வேலழகனும் வெற்றிவேலு சரஸ்வதியின் பிள்ளைகளாக உதித்தனர் ஒருபெண் பிள்ளைக்கு பெயர் சூட்டும் உரிமை எனக்கு கிடைக்காமற் போனது எனது துர்அதிஸ்டம்

அமரர் அவர்கள் என்வீட்டு அலுவல்களை தன்வீட்டு அலுவல் போல் முன்நின்று நடத்துவார் அவர் என் தந்தையின் ஏவல்களை மிகுந்த பணிவுடன் நிறைவேற்றினார். அதுவே என்னை என்மைத் துனர் மீது அளவற்ற அன்பு வைக்க காரணமாயிற்று என் வயல்வேலை களில் பெருமைபாராது தானும் என்னுடன் சேர்ந்து உதவிகள் செய் வார் எனக்கு இன்று போல் ஞாபகம்வரும் சம்பவம் ஒன்றைக் கூறு கிறேன் மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு பின்னாலுள்ள எனது வயலுக்கு நான் உரமிடுவதற்கு உதவியாக என் மைத்துனரை அழைத்துச் சென்றேன் என்மைத்துனர் உரபாக்கை தெருவிலிருந்து பல காணிகள் கடந்து தோளில் சுமந்து கொண்டு வருகையில் என் வயலுக்கு அருகில் அமைந்துள்ள சீமேந்து வாய்க்காலில் வழுக்கி விழுந்து அவலப்பட்டார். அச் சம்பவம் அவர் எனது சகோத ரிக்கோ தனது பிள்ளைகளுக்கோ எப்போதாவது சொல்லவில்லை

இச் சந்தர்ப்பத்தில் நான் பெயர் சூட்டப்பாக்கியம் பெற்ற அவரது புதல்வர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்வது பொருத்தமென எண்ணுகின்றேன் அவரதுபுதல்வர்கள் நால்வரிலும் காணப்படும் மிகச்சிறந்தகுணம் பணிவு பணியுமாம்பெருமை என்ற வாக்கியத்துக்கிணங்க வாழ்பவர்கள் எவருடனும் இனிது பழகுவார்கள் தந்தைதாயைத் தெய்வம் போல மதிப்பவர்கள் தந்தையார் சுகவீன முற்றிருந்த வேளையில் அவர்களின் அரவணைப்பே அவருக்கு பெரும் ஆறுதலாக இருந்தது அமரர் செய்தபூர்வீக புண்ணியமே அவருக்கு புதல்வர்களின் உதவிகிடைப்பதற்கு ஏதுவாக இருந்தது முதல்மூவரும் ஊருடன் இருந்து அமரரின் உடல் நலத்தைக் கவனிக்க அயிராம்மை யில்களுக்கப்பால் ஜெர்மனிநாட்டில் 13வருடங்களாக வாழ்ந்த கடைசி மகன் வேலழகன் தந்தையாருக்கு சுகவீனம் என்று அறிந்ததும் ஓடோடி வந்து அவரைப்பார்த்து வேண்டியஉதவிகள் செய்துதிரும்பினார் நல்ல பிள்ளையைப்பெற்றார் என்றுஊரார் போற்றினர் வேலழகன் தந்தை யாரைப்பார்த்து குடும்பத்துக்கு வேண்டியபொருளுதவி செய்ததுடன் நில்லாது உறவினர்களுக்கும் தன்னாலியன்ற உதவிகளைச் செய்தனை யிட்டு அவருடையதாய்மாமன் என்றவகையில் நான்பெருமையும் சந் தோஷமும்மடைகிறேன்

இறுதியாக ஒன்று கூறிஎன்உரையை முடிக்கிறேன் என்இனிய மைத்துனர் அமரர்சின்னத்தம்பி வெற்றிவேலு பக்தாவுக்கேற்ற பதிவ்ரிதையுடன் பூரணவாழ்வுவாழ்ந்து பொறுப்புள்ளபண்புள்ள பிள்ளை களைப்பெற்று உற்றார் உறவினர்கள் பெருமைப்பட இறைவன டிசேர்தார் அவர் அனுதினமும் வணங்கும் ஆலடிவயிரவருக் விசலத் தனைமுருகனும் அவருக்குநல்ல அமரத்துவம் கொடுப்பார்களாக.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யாருக்கு வெற்றி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் பன்னாகம் உயர்திரு சி. ஞானச்சந்திர மூர்த்திக்கும் எனக்கு மிடையிலான ஆசிரிய-மாணவத் தொடர்பு நாளடைவில் அண்ணன் தம்பி உறவாகப் பரிணமித்ததைப் பலரும் அறிவர் இந்தஉணர்வில் உதயமானதே வெற்றிவேலு மைத்துனர் என்னும் மாறாதசொத்து!

'அண்ணரின் மைத்துனர்' எனஅறிமுகமாகிப் பின்னர் 'மைத்துனரின் அண்ணர்' எனமனதில் நிறைந்தவர் இவர்.

பழக்கத்துக்கு இனிமையானவர்; பார்வைக்கு எளிமையானவர்; பண்பாட்டுக்கு உரிமையானவர் என்னும் பாராட்டுகளுக் கெல்லாம் சொந்தக்காரரே எமது சொந்தக்கார மைத்துனராவார்

நெஞ்சினிலே பட்டதைக் கொஞ்சமும் வஞ்சகமின்றி வெளிப்படுத்தும் பிஞ்சுமனம் இவருக்கே உரியது இவருக்காகவே இறைவன் அருளிய எமதருமைச் சோதரி சரஸ்வதியுடன் ஆற்றிய இல்லறம் என்னும் நல்லறங் காரணமாக நற்குணம் வாய்த்த சற்புத்திரர்கள் இவருக்குக் கிடைத்தனர்

தந்தையின் தொடர்பினைச் சிந்தையிலே கொண்டு அவரது அன்புப்புதல்வர் கலையழகன் தமது குடும்பத்துடன் வவுனியாவில் எம்மருகே வாழ்ந்த இனிய நாட்களின் பசுமை நினைவில் நிற்கிறது

நோய்வாய்பட்ட மைத்துனர் குணமாகி நலத்துடனும் பலத்துடனும் நீடுவாழ்வார் என்றே நம்பி எதிர் பார்த்தோம் ஆனால் எம்மைவிட ஆண்டவனுக்கு அவர் அத்தியவசியமாகத் தேவைப்பட்ட உண்மை இப்பொழுது தான் தெரிகிறது

''நல்லவர் நாவசைந்தால் நாடசையும்'' என்பார்கள் உள்ளத்தூய்மையுடன் உண்மையுடன் என்னை 'மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துனர்' எனஉரிமையுடன் அவர் அழைத்த மண்ணிலிருந்து எனக்கு மேலும் மைத்துன உறவுகள் மலரத் தெய்வீகம் துணை தந்தது

அரசியலில் மட்டுமல்ல மனிதனின் அன்றாடவாழ்வும் போராட்டமாகிப் போட்டிமயமாகப் போய்விட்ட பொல்லாத காலகட்டம் இது! இந்தநெருக்கடி நிலையிலெல்லாம் வல்லஇறைவனே எம்மிடமிருந்து எங்கள் வெற்றியைத் தன தாக்கி எம்மைத் தவிக்கவிட்டான் தனிக்கச் செய்தான்!

எங்கள் மைத்துனர் இடையறாது வழிபடும் குலதெய்வம்விசவத்தனை வேலவனுக்கே வெற்றிவேலு உரித்தானர் இவ்வகையில் நோக்கும்போது வெற்றி எமக்கா? எங்கள் இறைவனுக்கா?

சண்டிலிப்பாய் அ. சிவஞானம்
சமாதான நீதிவான்
வவுனியா

---

# எங்கள் அப்பப்பா

எங்கள் அப்பாவுக்கு அம்மாவுக்கு தாய் தந்தை இல்லாத குறையை நீக்கி அப்பாவாக இருந்தீர்கள் எங்களுக்கு அப்பப்பாவாக இருந்தீர்கள் நீங்கள்தானே ஆசைஅப்பப்பா அப்பா அடித்தாலும் அடிக்கவிட மாட்டிர்களே ஓடிவந்து அடியாதேயட என்று மறித்து விடுவீர்களே இனியார் எங்களுக்கு ஆறுதல் கூறுவார்களோ உங்களைஎன்றும் மறவோம்

எங்கள் அப்பப்பாவே எங்குசென்றாய் ஆலமரமாய் எமக்கிருந்தாய் அன்புமொழி பலசொல்வாய் எங்களது ஆருயிரேஅப்பப்பா பற்பலசேவைசெய்தாய் பாரினிலே நற்பெயர் கேட்டாய் இங்கெல்லாம் தினமும் நாங்கள் உங்கள்கதைகூறி மகிழ்ந்திருந்த வேளைதனில் உண்மையாகவே நீசென்று விட்டதை நினைக்கையில் நெஞ்செல்லாம் உருகுதே ஆலடி வைரவரின் அன்பான பாதங்களில் நீங்கள்சென்றிருப்பீர்கள் எனநிச்சயமாய் நினைக்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை வேலனையும் ஆலடிவைரவரையும் வேண்டுகிறோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்புப் பேரப்பிள்ளைகள் சார்பாக
கு. கல்யாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தியறிந்து ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும். இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி மயானம்வரை வந்து ஆறுதல், கூறியோருக்கும் மற்றும் அந்தியேட்டி, சபிண்டிகரணக் கிரியைகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் பல்வேறு வகைகளில் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

பண்ணாகம்,
சுழிபுரம்

இங்ஙனம்
அன்னாரின் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்
எதை நீ கொண்டு வந்தாய் — அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் — அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ — அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ — அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும், எமது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org